# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
## தமிழ் இலக்கிய நயம் / දෙමළ සාහිත්‍ය හා රසස්වාදය - I

சுட்டெண்:.................................. தரம் : **10** நேரம்: 1 மணித்தியாலம்

---

♦ இவ்வினாத்தாள் 2 கட்டாய வினாக்களைக் கொண்டது இவ்வினாக்களுக்கு வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும்

1. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

(i) ''மலர்'' அன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின் பலர் காணத் தோன்றல் மதி''

அ) குறளைக் கொண்டு கூட்டி எழுதுக.

.......................................................................................................................

ஆ) தலைவன் மதியிடம் வேண்டுவது யாது?

.......................................................................................................................

Education
கல்வி
අධ්‍යාපන

(ii) ''தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள் வான்உறு மதியம் வந்தது என்று எண்ணி''

அ) இவ் வரியில் இடம பெறும் அணியை எடுத்து விளக்குக.

.......................................................................................................................

ஆ) இப்பகுதி எவ்வகை இலக்கியத்தை சார்ந்தது?

.......................................................................................................................

(iii) ''இன்றைக்கு இரவைக்குப் பாருங்கள் முசுப்பாத்தியை''

அ) இக்கூற்று எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

.......................................................................................................................

ஆ) முசுப்பாத்தியாக இடம் பெறப் போகும் விடயத்தைக் குறிப்பிடுக?

.......................................................................................................................

(iv) புரசை யானை அன்னன் புகலோடும் விரைசெய்வார்குழல்

அ) இப்பகுதி இடம் பெறும் இலக்கியம் யாது?

.......................................................................................................................

ஆ) இலக்குமனன், தாரை ஆகியயோரின் சிறப்புக்கள் யாவை?

.......................................................................................................................

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

(v) ''வாழ்க்கை என்பது போராட்டம் இதில் வலிமையானவையே வாழும்''

அ) இக் கொள்கை யாருடையது

........................................................................................................................................

ஆ) இக் கொள்கையின் விளக்கம் என்ன?

........................................................................................................................................

(5 x 4 = 20 புள்ளிகள்)

2. கீழ்காணும் உரைப்பகதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒரு வாரம் கூடத் தாங்கவில்லை ஒருநாள் காலையில் கன்றுக் குட்டியின் முகத்தில் ஈக்கள் மொய்த்தன. அதை எங்கோயோ இழுத்துக் கொண்டு போய்விட்டான் மாடசாமி. சில தினங்களுக்குள்ளாகவே தாய்ப்பசுவுக்கு முன்னால் ஒரு வைக்கோல் போர் அடைத்த கன்றுக் குட்டியை கொண்டு வந்து நிறுத்தினான் அந்தப் பால்காரன். பசுவின் மடியில் பால் சுரந்தது. கண்களில் நீரும் வழிந்தது. அது கதறிய கதறலுக்கு சுவருக்கு அப்பால் நின்ற காளை மாடும் எதிரொலி கொடுத்தது. தைப்பொங்கல் வந்தது மனிதர்கள் சாப்பிட்ட மறுநாள் மாட்டுக்காகவும் பொங்கல் வைத்தார்கள்.

அடுத்த வீட்டுக் காளைக்கு அதன் சொந்தக் காரன் கொம்பு சீவிவிட்டு அலங்காரங்கள் செய்து வைத்து அதைத் தட்டிக் கொடுத்து ஊர் சுற்ற அனுப்பி வைத்தான் கிராமத்தில் அது இருந்த போது மஞ்சு விரட்டில் கலந்து கொண்டு ஊரையே கதி கலக்கிய காளை பட்டனத்துக்கு வந்த பிறகு அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை பார வண்டி இழுப்பதோடு சரி அநதக் காளை மாட்டுக்கு மஞ்சு விரட்டு நினைவு வந்து விட்டது. அந்தநினைவோடு சுவருக்கு அப்பால் நின்ற பசுவை எட்டிப் பார்த்தது. பசு தன்கெதிரில வைத்த பொங்கைளை முதலில் முகர்ந்து பார்த்துக் கண்ணீர் வடித்தது. பிறகு தன் கொம்புகளால் அந்தப் பாத்திரத்தை மோதிக் கீழே உருட்டி விட்டது

மாடசாமிக்கு ஒன்றும் புரியவில்லை அருகில் நின்ற அவனுடைய மகனுக்கும் ஒன்றும் புரியவில்லை மாடசாமி பசுவின் கழுத்தில் அன்போடு தடவிக் கொடுத்தும் பார்த்தான் அதன் முகத்தல் மெதுவாகத் தட்டிக் கொடுத்தான் மறுபடியும் சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்து அதன் அருகில் கொண்டு வந்தான்

(i) கன்றினது நிலைமை பற்றி கதாசிரியர் கூற வருவது யாது?

........................................................................................................................................

........................................................................................................................................

(4 புள்ளி)

(ii) மாடசாமியின் அறியாமை புலப்படும் விதம் யாது?

........................................................................................................................................

........................................................................................................................................

(4 புள்ளி)

(iii) பசுவினதும், காளையினதும் துயரம் குறிப்பிடப்படுமாற்றை விளக்குக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

(6 புள்ளி)



kalvi.lk

(iv) சிறு விளக்கம் தருக.

மஞ்சு விரட்டு, வைக்கோல் போர் அடைத்த கன்றுக் குட்டி

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(6 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளி)

அல்லது

*பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை*
*பேசிடிலோ அது பெருந்தவறு என்ற*
*எண்ணம் படைத்தவர் மண்ணிலத் புதைய*
*எண்ணற்கரிய கலை படை போம்*

*சாதி சமய சங்கறுத்து, பெண்கள்*
*தாழ்வுயெனும் தீய போக்கொழித்து இம்*
*மேதிணியில் புது மாற்றம் படைத்து பெண்*
*விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்*

*பெண்ணுக்கு இங்கோர் தனி நீதி - என*
*பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை*
*மண்ணில் புதைந்து மகிழ்ந்திடுவோம் - நவ மாதர்*
*அறங்கள் படைத்திடுவோம்*

*போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்*
*பொய்மைத் திரையை கிழித்தெறிவோம்*
*பாலித்திடுவோம் புதுயுகத்தை மலைப்*
*பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்*

(i) இக் கவிதை வெளிப்படுத்தி நிற்கும் கருத்து யாது?

.................................................................................................................................

.................................................................................................................................

(4 புள்ளி)

(ii) மேதினியில் மாற்றத்தை ஏற்படுத்த பெண்கள் செய்ய வேண்டிய புரட்சிகள் யாவை?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(4 புள்ளி)

(iii) ஆண் ஆதிக்கச் சிந்தனைகள் இக் கவிதையில் இழையோடுகிறது எடுத்துக் காட்டுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(6 புள்ளி)



kalvi.lk

(iv) இக் கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களை விளக்குக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(6 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
### தமிழ் இலக்கிய நயம் / දෙමළ සාහිත්‍ය හා රසස්වාදය - II

சுட்டெண்:.................................. தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலம்

---

♦ வினாத்தால் II ல் 1 ம் வினாவுக்கும், ஏனைய 2,3,4,5 ஆகிய வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்குமாக, மொத்தம் 3 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக

1) பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள தொடர்களின் / வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில கவிதையை நயத்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.

*அன்னகாலம் அகலும் அளவினில் முன்னை வீரன்*
*இளவலை மொய்ம்பினொய் சொன்ன எல்லையின்*
*ஊங்கினும் தூங்கினன். மன்னன் வந்திலன்*
*என் செய்தவாறு ஆரோ!*

*பெறல் அரும் திருப்பெற்று உதவிப் பெருந்*
*திறன் நினைத்திலன் சீர்மையின் தீர்ந்தன்*
*அறம் மறந்தனன் அன்புகிடக்க! நம் மறன்*
*அறிந்திலன் வாழ்வின் மயங்கினான்*

*நன்றி கொன்று அரு நட்போடு நார் அறுத்து*
*ஒன்றும் மெய்மை சிதைத்து உரை பொய்த்துளார்*
*கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்*
*சென்று மற்று அவன் சிந்தையை தேர்க்குவாய்*

*வாரைங்கள் வெருவி மலை ஒரிஇ*
*கான் ஒருங்கு படர அக்கார் வரை*
*மீன் நெருங்கிய வானகம் மீன் எலாம்*
*போன பின் பொலிவற்றது போன்றதே*

*அன்ன காலையன் ஆண் தகை ஆளியும்*
*பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்*
*சொன்ன தரையைச் சுற்றினர் நின்றவர்*
*என்ன செய்வது? எயினன் என்றனர்*

அ) இராமன், இலக்குமணனிடம் சுக்கரீவன் குறித்து ஆவேசப்பட்டு கூறியவை
ஆ) இராமன் இலக்குவனை கிட்கிந்தைக்கு சென்று வரப் பணித்த காரணம்
இ) கிட்கிந்தை மலையின் தோற்றம்

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

ஈ) இராமனன், இலக்குமணனின் சிறப்பை அணிகள் மூலம் எடுத்து காட்டல்
உ)கம்பரின் கவித்துவம்
என்பவற்றைக் கருத்திற் கொண்டு பந்தி அமைப்பு முறையில் நயத்து எழுதுக.

2. திருக்குறள் நலம் புணைந்து உரைத்தலில்
அ) முக அழகு
ஆ)ஏனைய உறுப்புகளின் சிறப்பு என்பவற்றை விளக்குக.

3. எலியம் என்ற சிறு கதையில் எலிகளை ஒழிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளையம், தோல்விகளையம் எடுத்துக் கட்டுக.

4. விவேக சிந்தாமணி எனம் கவிதையில்
பெண்ணின் கண் அழகினை கவிஞர் விளக்கப்படுமாற்றினையும், கவிஞரின் கற்பனைத் திறனையும் விளக்குக.

5. முளிதயிர் பிசைந்த எனும் செய்யுளில் தலைவன் தலைவியரின் பரஸ்பர அன்புணர்வு வெளிப்படுமாற்றை விளக்குக.

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

*May*

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**